**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் கொழும்பு மாவட்ட நீதாசன வலயத்திற்குரிய 2018 ஆம் ஆண்டிற்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2087 - 2018 අගෝස්තු මස 31 වැනි සිකුරාදා - 2018.08.31

*2087 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1788* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1799* |

**கவனிக்க.-** புலமைச் சொத்து (திருத்தம்) சட்டமூலம் 2018, ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*1785-B 81444-5,403 (2018/08)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

5. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | காசல் வைத்தியசாலை உட்பட கிருலபனை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ்மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |

8-948

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | கம்புருபிட்டிய | கம்புருபிட்டிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கங்கபட பத்து பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை. |
| மாத்தறை | கொடபொல | உடுவக பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மொரவக் கோரளை மேற்குப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை. |
| மாத்தறை | பிடபெத்தர | தங்கொலுவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மொரவக் கோரளை மேற்குப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை. |

8-970

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - அம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 10.

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | திஸ்ஸமஹராம | கிரிந்த பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை. |

8-971

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – அம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 10.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாந்தோடடை | அம்பாந்தோட்டை | பந்தகிரிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மாகம்பத்துவ பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாந்தோடடை. |
| அம்பாந்தோடடை | அம்பலன்தோட்டை | அம்பலன்தோட்டை கிழக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கிருவாபத்துவ கிழக்குப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாந்தோடடை. |

8-972

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

5. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி நகரம் கிழக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி. |

8-973

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 10.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | கிரிந்த புஹுல்வெல்ல | கங்கபட பத்துவ கிரிந்த பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை. |

8-974

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகஸ்து 10.

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | ஹொரணை | ரய்கம் கோரளை பிரிவின் உடுவ பிரதேசத்தின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாணந்துறை | மஹவில பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |

08-975

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 10.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் தொட்டவத்த பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |

8-976

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி – குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும். என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 13.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | குளியாபிட்டிய கிழக்கு | கட்டுகம்பளை ஹத்பத்து (அரக்யால) பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | ரிதீகம | குருநாகல் மாவட்டத்தின் ஹிரியால ஹத்பத்து பிரிவின் தெலம்புகல்ல பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

8-1130

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 14.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| இரத்தினபுரி | குருவிட்ட | புஸ்ஸல்ல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் குருவிட்ட கோரளை பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், இரத்தினபுரி. |

8-1131

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | கெக்கிராவ | காஞ்சனகுலம பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கலாகம்பலாத பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

8-1132

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளின் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017 (2018)

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பானது இப்பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**எழுத்துப் பரீட்சை.-** இப்பரீட்சையானது பின்வரும் மூன்று (03) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

(1) நுண்ணறிவுப் பரீட்சை
(2) மொழித்திறன்
(3) புகையிரத பாதுகாப்பாளர் நீதி, புகையிரத இயக்கம் மற்றும் வர்த்தகப் பிரமாணங்கள்.

*பரீட்சைத் திகதி* : இப்பரீட்சை திசெம்பர் மாதம் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக் குழுவின் ஆலோசனைகளுக்கமைய செயலாளருக்கு அதிகாரமுண்டு.

**பரீட்சை நடைபெறும் திகதி :**

02. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 08 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

03. **சேவை நிபந்தனைகள் :**

3.1 அரசாங்க சேவையில் உள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்படும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2017.01.26 ஆந் திகதி PSC/ EST/ 04-01-43/ 05/ 2016 ஆம் இலக்க அனுமதியின் கீழ் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது இதன் அடுத்துப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக் கோவையின் நிதிப் பிரமாணங்கள், 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் ஒருவர் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

3.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

3.3 நியமனமானது ஒரு வருட வேலை பார்க்கும் காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும். இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பானது செய்த திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தப்படல் வேண்டும்.

3.4 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்து உரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

3.5 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற ஏதேனும் பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

4. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** .- 03/2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதி பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன்படி இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615 -10×1,335 - 8×1,630 -17× 2,170 - ரூபா 1,10,895 (எஸ். எல். 1-2016) ஆகும். இச்சம்பளம் குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் சட்டதிட்டங்களின் படியே வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வேறு படிகளும் உங்களுக்கு உரித்தாகும்.

5. **ஆட்சேர்ப்பதற்கான தகுதி**:-

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;

(iii) சிறந்த ஒழுக்க நடத்தையுடனும் நாட்டின் எப்பகுதியிலும், சேவையாற்றுவதற்கான தேக ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(ஆ) ***அனுபவ அறிவு***.-

(i) நிலைய அத்தியட்சகர் சேவையில் தரம் I நிலைய அத்தியட்சகராக அல்லது புகையிரத பாதுகாவலர் சேவையில் குறைந்தபட்சம் ஐந்த (5) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்:

அல்லது,

(ii) விசாரணை உத்தியோகத்தர்/ பரிசோதகர் போக்குவரத்து/ மாவட்டப் பரிசோதகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்)/ புகையிரத நிலைய அத்தியட்சகர்/ சரக்கு பண்டகசாலை உத்தியோகத்தர்/ சரக்கு பண்டகசாலை மேற்பார்வையாளர்/கள அதிபர்/பிரதான புகையிரத மேற்பார்வையாளர் நிலைய அத்தியட்சகர் (விஷேட தரம்)/ பாதுகாப்பு பரிசோதகர் (விஷேட தரம்)/புகையிரத பாதுகாவலர் சேவை உத்தியோகத்தர்/பாதுகாப்பு (விஷேட தரம்)/பாதுகாப்பு பரிசோதகர் (விஷேட தரம்) பதவியில் உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- புதிய ஆட்சேர்ப்பு செயல்முறைக்கு இணைத்துக்கொள்ளும் வரை விசாரணை உத்தியோகத்தர்/ பரிசோதகர் போக்குவரத்து/ சரக்கு பண்டகசாலை உத்தியோகத்தர்/ பாதுகாப்பு பரிசோதகர் போன்ற உத்தியோகத்தர்களுக்கு இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

***வேறு***:-

(i) விண்ணப்பம் கோரப்பட்ட தினத்திற்கு முன்பாக ஐந்து (5) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

(ii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான மேற்கூறப்பட்ட அனைத்து தகுதிகளும் விண்ணப்பத்தில்/ வர்த்தமானி பத்திரிகையில் காணப்படும் தினத்திற்கு முன்னர் அனைத்து விதத்திலும் பூரணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கிடையாது.

6. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200 ஆகும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்கள ஆணையாளரின் வரவு இல 20-03-02-13 அதனடிப்படையில் அரசாங்க ஆதாயத்திற்கு வரவாகுமாறு நாடெங்கும் உள்ள எந்தவொரு தபாலகம்/ உபதபாலகத்திற்கு பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிடவும். பரீட்சைக் கட்டணமாக ரசீது அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கு செலுத்தப்படும் பணம் எச்சந்தர்ப்பத்திலும் திருப்பித் தரப்படமாட்டாது மேலும் வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்று.

7. **விண்ணப்பிக்கும் முறை:-**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைய வேண்டு மென்பதுடன் அது ஏ4 (A 4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். இதற்காக கணினி மூலம் அல்லது தட்டச்சு இயந்திரம் மூலம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பாவிக்க முடியும். 1.0 தொடக்கம் 2.12 வரையிலான கூடுகள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3.0 தொடக்கம் 7.0 வரையிலான கூடுகள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தமது விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இப்படிவங்கள் கணினி அல்லது தட்டச்சின் மூலம் தயாரிக்கப்பட்டவையாகவும் இருக்கலாம் என்பதை விசேடமாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்புகள் ஏதுமின்றி நிராகரிக்கப்படுவதனால், விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பதனையும் மற்றும் அனைத்து தகவல்களையும் உட்செலுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதனையும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் கழராதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பதனையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தங்கள் கையெழுத்தில் தெளிவாக விண்ணப்பங்கள் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளினால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் 2018.09.28 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியினை அடையக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் உரிய திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும் விண்ணப்பங்கள் இடப்படும கடித உறையின இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு".

(ஈ) பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(உ) ஒவ்வொரு அம்சமும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரம் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஊ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்பதனை தெரிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது என்பதனை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகை மூலமாக வெளியிடப்படும். பத்திரிகை மூலமாக வெளியிடப்பட்டு அத்தினத்திலிருந்து ஓரிரு நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு கிடைக்கப்பெறாவிடின் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படல் வேண்டும். பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கும்போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். கொழும்பை தவிர்ந்த விண்ணப்பதாரியாயின் தகவல்களை பெக்ஸ் மூலம் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கு விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தை குறித்து கடிதத்துடன் பெக்ஸ் மூலமாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது சிறந்ததாகும். மேலும் பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மை எனக்கொள்ள உங்களிடம் இருக்கும் விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் பிரதிகளை தயார்நிலையில் வைத்திருப்பது சிறந்தது.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல்:-**

(அ) வர்த்தமானி விளம்பரத்தில் உள்ளவாறு தகுதியுடையவர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார் என்பதைக் கொண்டும் விளம்பரத்தில் கூறியவாறு வயதெல்லையினை உடைய, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்தன்று மற்றும் அத்தினத்திற்கு முன் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கட்டணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியான முறையில் பூரணப்படுத்தி அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கான அனுமதிப்பத்திரம், பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்ப தாரிகள் ஒவ்வொருவரும் தமது கையொப்பத்தை முன் கூட்டியே உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரங்களைப் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக் கோவை ஒன்று இவ் வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்படுகின்றது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்திலும் அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரி ஏதேனும் திணைக்களத்தில் சேவையாற்றுபவராயின் திணைக்களத் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோத்தரால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதற்காகும் மற்றும் அவர் பதவிக்கு தகுதியானவர் என்பதாக ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

9. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஆளடையாள ஆவணங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட சாரதி அடையாள அட்டை.

10. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை**.- விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை பெற்றுத்தர வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறைக்கமைய யாதேனும் ஒரு விண்ணப்பதாரிக்கு தகுதியற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு செயலாளரினால் வரையறுக்கப்பட்டவாறு கையாளப்படல் வேண்டும்.

12. **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி ஊடகம்**:-

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவர் தான் சேவைக்குச் சேர்வதற்காகத் தகைமை பெற்ற பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்த மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.- (1) விண்ணப்பதாரி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவத்தில் சுட்டிக்காட்டப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு விண்ணப்பதாரி அனுமதிக்கப்படமாட்டார்கள்.

13. **ஆட்சேர்ப்பு முறை**.-

13.1 ***எழுத்துமூலப் பரீட்சை***.-

பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சைத் தாள்கள் மூன்றினை (03) உள்ளடக்கியிருக்கும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்த பட்சப் புள்ளிகள் என்பன பின்வருமாறு :-

| பாடம் | புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |
| 2. மொழித் திறன் | 100 | 40 |
| 3. புகையிரத பாதுகாவலர் சட்டம், புகையிரத இயக்கம் மற்றும் வர்த்தக பிரமாணங்கள் | 100 | 40 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

13.2 ***பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை***.-

இவ் அறிவித்தலில் 13.1 பந்தியின் அடிப்படையில் எழுத்துப் பரீட்சையில் பங்குபற்றி சித்திபெற்ற விண்ணப்பதாரிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் இருக்கின்ற வெற்றிடங்களுக்கு சமனாக இரட்டிப்பு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படுவர். எழுத்து மற்றும் நேர்முகப்பரீட்சையில் முழுப்புள்ளிகளின் கூட்டுத்தொகை கொண்டு திறமைகளின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி இறுதிக் கட்ட புள்ளி விபரக்கோவையை செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு ஒப்படைப்பதுடன் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் புள்ளி விபரங்கள் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கப்படுவதுடன் www.result.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படுவதுடன் அதற்கான பொறுப்பை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகள் மற்றும் சிரேஷ்ட தகைமைகளை பார்ப்பதற்கும் கீழ்வரும் அட்டவணையின் அடிப்படையில் நியாயமான முறையில் நேர்முகப்பரீட்சை இடம்பெறும். அதில் பெறப்படும் அதிகூடிய புள்ளிகள் 100 ஆகும்.

| விடயத் தலைப்பு | உச்சப் புள்ளி |
|---|---|
| 1. கல்வித் தகைமை | 30 |
| 2. தலைமைத்துவப் பண்பு | 70 |
| கூட்டுத்தெகை | 100 |

இதில் புள்ளிகள் வழங்கப்படும் விதிமுறையானது கீழ்வருமாறு காணப்படும்:

<table>
<tr><th>புள்ளிகள் வழங்கப்படும் முறை</th><th colspan="2">பார்க்கப்படும் விடயங்கள்</th><th>கொடுக்கப்படும் புள்ளிகள்</th><th>அதிகூடிய புள்ளிகள்</th></tr>
<tr><td rowspan="3">கல்வித் தகைமைகள்</td><td colspan="2">பல்கலைக்கழக பட்டம் தொடர்பாக</td><td>15 புள்ளிகள்</td><td rowspan="3">30</td></tr>
<tr><td colspan="2">முனைவர் பட்டம்</td><td>10 புள்ளிகள்</td></tr>
<tr><td colspan="2">மேற்கூறப்பட்ட பட்டங்களுடன் போக்குவரத்து தொடர்பான பட்டம் இருப்பின்</td><td>05 புள்ளிகள்</td></tr>
<tr><td rowspan="6">பணி மூப்பு தொடர்பான</td><td rowspan="3">முதல் வகுப்பில் பூரணமாக ஐந்து (05) வருட காலம் புகையிரத அத்தியட்சகராக அல்லது புகையிரத பாதுகாவலர் சேவையில் உத்தியோகத்தராக முனைப்பானதும் திருப்திகரமான சேவைக் காலத்தினை கொண்டிருப்பின்</td><td>ஒரு வருடத்திற்கு</td><td>04 புள்ளிகள் வீதமாக</td><td rowspan="6">70</td></tr>
<tr><td>ஒரு வருடத்திற்கு குறைவு 06 மாதத்திற்கு கூட</td><td>02 புள்ளிகள் வீதமாக</td></tr>
<tr><td>06 மாதத்திற்கு குறைவு 03 மாதத்திற்கு கூட</td><td>01 புள்ளி வீதமாக</td></tr>
<tr><td rowspan="3">விசாரணை உத்தியோ கத்தர்/பரிசோதகர் போக்கு வரத்து/மாவட்ட பரிசோதகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்)/புகையிரத நிலைய அத்தியட்சகர்/ சரக்கு பண்டகசாலை உத்தியோகத்தர்/சரக்கு பண்டகசாலை மேற்பார்வை யாளர்/கள அதிபர்/பிரதான புகையிரத மேற் பார்வையாளர் நிலைய அத்தியட்சகர் (விஷேட தரம்)/பாதுகாப்பு பரிசோதகர் (விஷேட தரம்)/ புகையிரத பாதுகாவலர் சேவை உத்தியோகத்தர்/பாதுகாப்பு (விஷேட தரம்)/பாதுகாப்பு பரிசோதகர்/பாதுகாப்பு பரிசோகதர் (விஷேட தரம்) பதவியில் உத்தியோகத்தராக சேவை காலத்தினை கொண்டிருப்பின்</td><td>ஒரு வருடத்திற்கு</td><td>06 புள்ளிகள் வீதமாக</td></tr>
<tr><td>ஒரு வருடத்திற்கு குறைவு 06 மாதத்திற்கு கூட</td><td>03 புள்ளிகள் வீதமாக</td></tr>
<tr><td>06 மாதத்திற்கு குறைவு 03 மாதத்திற்கு கூட</td><td>01 புள்ளி வீதமாக</td></tr>
</table>

(ii) பொது நேர்முகப் பரீட்சைச் சபையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

**கவனிக்க வேண்டியது**.- நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதனால் நியமனம் வழங்கப்படுவதற்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

13.3 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

**14. எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்**.-

(1) **நுண்ணறிவுப் பரீட்சை**.-விண்ணப்பதாரிஎண்கள்,மொழிசார் மற்றும் உருவவடிவங்கள்,இடைத்தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிபுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது,

பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடையளிக்கக்கூடிய வினாக்கள் 50 இடம்பெறும். அனைத்திற்கும் பதில் எதிர்பார்க்கப்படுகின்றன. கொடுக்கப்படும் வினாத்தாளிலேயே அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும் (காலம் : 1 மணித்தியாலம்)

(2) **மொழித்திறன்** .- இலக்கணம், சுருக்கம், பொருள் விளக்கம், தெளிவான மொழி நடை மற்றும் மொழித் திறன் மூலம் பெற்றுக்கொண்ட அறிவினை அளவிடுவதற்கு சுருக்கமாக விடையளித்தல், கட்டுரை வரைதல் மற்றும் பந்தியினை வாசித்து அதன் மூலம் வினவப்படும் வினாக்களுக்கு விடையளித்தல் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றன. கொடுக்கப்படும் வினாத் தாளிலேயே அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும். (காலம் : 02 மணித்தியாலங்கள்)

(3) **புகையிரத பாதுகாவலர் சட்டம், புகையிரத இயக்கம் மற்றும் வர்த்தக பிரமாணங்கள்** .- புகையிரத பாதுகாவலர் சட்டம், புகையிரத இயக்கம் மற்றும் வர்த்தக பிரமாணங்கள், புகையிரத நிதி முறைமை மற்றும் திணைக்கள விதிக்கோவை ஆகியவற்றின் விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதற்கு கட்டுரை வரைதல் மற்றும் பந்தியினை வாசித்து அதன் மூலம் வினவப்படும் வினாக்களுக்கு விடையளித்தல் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. கொடுக்கப்படும் வினாத்தாளிலேயே அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும். (காலம் : 02 மணித்தியாலங்கள்)

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இப்பிரசுரத்தில் மொழிகளுக்கிடையில் வேறுபாடு இருப்பின் அல்லது மூன்றிற்கும் இடையில் தொடர்பில்லா தன்மை காணப்படின் சிங்களத்தில் பிரசுரிக்கப்படும் வர்த்தமானி விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜீ. எஸ். விதானகே,
செயலாளர்,
போக்குவரத்து மற்றும் சிவில்
விமான சேவைகள் அமைச்சு.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,
7 ஆவது மாடி,
செத்சிறிபாய,
II ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

## இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர்/(வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017 (2018)

Limited Competitive Examination For Recruitment to Executive Service category of Grade III of Assistance Superintendent (Commercial/ Transportation) in Sri Lanka Railway Department - 2017 (2018)

பரீட்சை மொழி ஊடகம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி ஊடகத்தில் விண்ணப்பமானது நிரப்பப்படல் வேண்டும்.

1.0 தனிப்பட்ட தகவல்கள் :–

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
(உதாரணம்: GUNAWARADHANA, H. M. S. K.) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :----.

1.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.6 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.7 பால் - ஆண் - 0 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்) ☐
பெண் - 1

1.8 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐

1.9 விவாக நிலை : (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)
விவாகமாகாதவர் - 1 ☐
விவாகமானவர் - 2

1.10 இனம் : (சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையோர் - 5)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்) ☐

1.11 பிறந்த திகதி :-
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

1.12 கையடக்க தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. .......... ஆந் திகதியிலுள்ளவாறு சேவைக்கு/தரத்திற்கு உள்வருவதற்காக தரப்படுத்தல் பரீட்சை/நேர்முகப் பரீட்சையில் தாங்கள் சித்தியெய்திய மொழி ஊடகத்தினைக் குறிப்பிடவும் :----.

3. (i) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 5.0 இல் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா? :----.

(அ) .......... ஆந் திகதியிலுள்ளவாறு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :----.

(i) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 5 (ஆ) இற்கமைய பந்தி 05 (ஆ) (i) / (ஆ) (ii) இன் கீழ் பரீட்சார்த்தி தகைமை பெற்றுள்ளாரா என்பதைக் குறிப்பிடவும் :----.

(ii) தற்போது வகிக்கும் பதவி :----.

(iii) தரம் :----.

(iv) பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(v) அப்பதவியில் நிரந்தரமான திகதி :----.

(vi) சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவுத்திட்டம் :----.

(vii) பரீட்சைக்கு தோற்றிய மொழி :----.

(ii) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 05 இல் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவி ஒன்றின் சேவைகள்/தரங்களின் தகைமைகள் பூர்த்திசெய்யப்படவேண்டிய ............ ஆந் திகதியில் உள்ளவாறான முனைப்பானதும் திருப்திகரமானதுமான மொத்தச் சேவைக்காலம் :----.

4.0 பரீட்சை கட்டணத்தை செலுத்துதல் :
பரீட்சைக் கட்டணம் :

(i) செலுத்தும் இடம் :----.

(ii) செலுத்தப்பட்ட பணம் :----.

(iii) பற்றுச்சீட்டு இல. :----.

(iv) செலுத்தப்பட்ட திகதி :----.

(விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச்சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.)

5.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

.......... ஆந் திகதிக்கு முன்வரும் மற்றும் வயது காலப் பகுதியில் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 05 (ஆ) இற்கமைய .......... ஆந் திகதியில் உள்ளவாறு சகல சம்பள ஏற்றங்களையும் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) நான் உழைத்துள்ளதுடன் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ளேன் என்பதுடன் எந்த வடிவிலான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதையும் நான் பிரகடனம் செய்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல விதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் அமைய இம்மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகுதியுள்ளது என்றும் எனது அறிவுக்கு எட்டியவரை இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .......... ஆந் திகதிய .......... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன். இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புக்கு இணங்க நான் தகுதியற்ற ஒருவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும் இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

6. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தனிப்பட்ட கோவையினைச் சரிபார்த்து)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................. என்பவர் ............................. என்னும் பதவியொன்றில் சேவையாற்று கிறார் என்றும், ................................................ ஆந் திகதிக்கு முன்னரான 5 வருட காலப்பகுதியில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார் என்றும் கூறப்பட்ட காலப்பகுதியில் எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை என்றும் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 06 (ஆ) இற்கமைய .......................... (ஐந்து) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ளார் என்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியினைக் கொண்டுள்ளார் என்றும் என் முன்னிலையில் இவ்விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும், குறிப்பிடப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதையும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின்/ அதிகாரம்
அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
( உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

8-1030/1

---

## இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017 (2018)

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/ போக்குவரத்து) தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பானது இப்பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2018.09.28 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்பான கடிதம் தபாலின்போது தொலைந்தது அல்லது தாமதமடைந்ததாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பற்றி கவனத்திற்கொள்ளப்படுவதில்லை. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தலினால் ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

**எழுத்துப் பரீட்சை**.- இப்பரீட்சையானது பின்வரும் மூன்று (3) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

(1) நுண்ணறிவுப் பரீட்சை

(2) மொழித்திறன்

(3) பொது அறிவு

**பரீட்சை திகதி** .- இப்பரீட்சை திசெம்பர் மாதம் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைய செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

**நேர்முகப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கிடையில் போதுமானதென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகளுக்காக பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய செயலாளர் தீர்மானிப்பார்.

02. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 12 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

03. **சேவை நிபந்தனைகள் :**

3.1 அரசாங்க சேவையில் உள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்படும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2017.01.26 ஆந் திகதி PSC/ EST/ 04-01-43/ 05/ 2016 ஆம் இலக்க அனுமதியின் கீழ் இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவை பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது இதன் அடுத்துப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக் கோவையின் நிதிப் பிரமாணங்கள், 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி ஒருவர் இலங்கை உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/ போக்குவரத்து) தரம் III இற்கு நியமிக்கப் படுவார்.

3.2 இப்பதவி நிரந்தரமானது.

3.3 நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும். சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/ போக்குவரத்து) தரம் III இன் ஆட்சேர்ப்புச் செய்த திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தப்படல் வேண்டும்.

3.4 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

3.5 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது நழுவுகின்ற பரீட்சார்த்திகளின் நியமனங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி இரத்துச்செய்ய இடமுண்டு.

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** .- 03/2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதி பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன்படி இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 1,10,895 (SL-1-2016) ஆகும். இச்சம்பளம் குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் சட்டதிட்டங்களின் படியே வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வேறு படிகளும் உங்களுக்கு உரித்தாகும்.

05. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்**.-

(அ) (i) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் ; ஆண் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;

(iii) நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணிபுரிவதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.-*** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டத்தினை வழங்கும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு.-** பட்டம் நடைமுறைக்கு வரும் திகதியானது தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னராக இருத்தல் வேண்டும்.

(இ) ***வயது.-*** தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதியன்று இருபத்தொரு (21) வயதிற்கு குறையாதிருப்பதோடு முப்பத்தைந்து (35) வயதினை அடையாதவராக இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் 1997.09.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் மற்றும் 1983.09.28 ஆந் திகதி அல்லது அதற்கு பின் பிறந்தநாளை கொண்டவருக்கு மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகுதியுண்டு.

***வேறு :-***

(ii) இப்பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்குத் தேவைப்படும் தகைமைகள் அனைத்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) யாதேனுமோர் மதப் போதகராக பதவி வகிக்கும் எந்தவொரு நபருக்கும் இப்போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு அல்லது தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

06. **பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200 ஆகும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சை திணைக்கள ஆணையாளரின் வரவு இல. 20-03-02-13 அதனடிப்படையில் அரசாங்க ஆதாயத்திற்கு வரவாகுமாறு நாடெங்கும் உள்ள எந்தவொரு தபாலகம்/ உப தபாலகத்திற்கு பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிடவும். பரீட்சைக் கட்டணமாக ரசீது அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கு செலுத்தப்படும் பணம் எச்சந்தர்ப்பத்திலும் திருப்பித்தரப்படமாட்டாது மேலும் வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்று.

07. **விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைய வேண்டுமென்பதுடன் அது ஏ4 (A 4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். இதற்காக கணினி மூலம் அல்லது தட்டச்சு இயந்திரம் மூலம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பாவிக்க முடியும். 1.0 தொடக்கம் 2.12 வரையிலான கூடுகள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3.0 தொடக்கம் 7.0 வரையிலான கூடுகள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தமது விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இப்படிவங்கள் கணினி அல்லது தட்டச்சின் மூலம் தயாரிக்கப்பட்டவையாகவும் இருக்கலாம் என்பதை விசேடமாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தங்கள் கையெழுத்தில் தெளிவாக நிரப்பப்படல் வேண்டுவதோடு மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்புகள் ஏதுமின்றி நிராகரிக்கப்படுவதனால், விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பதனையும் மற்றும் அனைத்து தகவல்களையும் உட்செலுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதனையும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் கழறாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பதனையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ஆ) விண்ணப்பதாரி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ அம்மொழி மூலத்தில் விண்ணப்பப்படிவத்தினை தங்கள் கையெழுத்தில் தெளிவாக பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரிகளினால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் 2018.09.28 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியினை அடையக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/ போக்குவரத்து) தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான

திறந்த போட்டிப் பரீட்சை - 2017 (2018)" என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படல் அத்தியாவசியமாகும்.

"பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு".

(ஈ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,40,360 இற்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவு பெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் தபாலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை தெரிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது என்பதனை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகை மூலமாக தெரிவிக்கப்படும். பத்திரிகை மூலமாக தெரிவிக்கப்பட்ட அத்தினத்திலிருந்து ஓரிரு நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு கிடைக்கப்பெறாவிடின் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படல் வேண்டும். பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கும் போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். கொழும்பை தவிர்ந்த விண்ணப்பதாரியாயின் தகவல்களை பெக்ஸ் மூலம் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கு விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தை குறித்து கடிதத்துடன் பெக்ஸ் மூலமாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது சிறந்ததாகும். மேலும் பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மை எனக்கொள்ள உங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் பிரதிகளை தயார்நிலையில் வைத்திருப்பது சிறந்தது.

08. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்:-**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் உள்ளவாறு தகுதியுடையவர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார் என்பதை கொண்டும் விளம்பரத்தில் கூறியவாறு வயதெல்லையினை உடைய, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்தன்று மற்றும் அத்தினத்திற்கு முன் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கட்டணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியான முறையில் பூரணப்படுத்தி அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) விண்ணப்பதாரி தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் முற்கூட்டியே தனது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்த வேண்டியதுடன் பரீட்சைக்காக அவர் சமுகமளிக்கும் முதல் நாளிலேயே அந்த அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். இந்த விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவதற்கு நேரிடும்.

**குறிப்பு.-** விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதற்காகும் மற்றும் அவர் பதவிக்கு தகுதியானவர் என்பதாக ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

9.0 **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்.**- விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காக பின்வரும் ஆளடையாள ஆவணங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட சாரதி அடையாள அட்டை.

10. **பொய்யான தகவல்கள் வழங்குவதற்கான தண்டனை.**- விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

11. இவ்வொழுங்கு விதிகளால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக செயலாளர் தீர்மானிக்கின்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி மூலம்.**-

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி தகைமை பெற்ற பல்கலைக்கழக பட்டத்தை எம்மொழி மூலம் எழுதி சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரச கரும மொழி ஒன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) விண்ணப்பதாரியொருவர் தகைமை பெற்ற பல்கலைக்கழக பட்டத்தில் பாடங்களை இரண்டு மொழிகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளின் மூலமாகவோ சித்தியடைந்திருப்பின், அந்தப் பல்கலைக்கழக பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் கூடிய தொகைக்கு விடையெழுதிய மொழி மூலமாகவோ அல்லது அரச கரும மொழியொன்றின் மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப் பாடத்தை இன்னுமொரு மொழியிலும் எழுதிச் சித்தியடைந் திருக்கும் சிறப்புப் பட்டம் பெற்ற விண்ணப்பதாரி ஒருவர், அவர் பிரதான பாடத்திற்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு.**- (i) மேற்போந்த (ஆ), (இ) என்பற்றில் பிரயோகிக்கப்பட்ட "தகைமை பெற்ற பல்கலைக்கழக பட்டம்" எனும் சொற்றொடர் 5 (ஆ) பந்தியில் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டங்களின் தகைமையைக் குறிக்கும்.
(ii) பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுத வேண்டும்.
(iii) பரீட்சார்த்தியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

13. **ஆட்சேர்ப்பு முறை.**-

13.1 எழுத்துமூலப் பரீட்சை.-
கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய மூன்று (3) வினாப்பத்திரங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை ஒன்று நடத்தப்படும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு பெறவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் என்பன கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :-

| பாடம் | புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |
| 2. மொழித் திறன் | 100 | 40 |
| 3. பொது அறிவு | 100 | 40 |

விண்ணப்பதாரிகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

*13.2* **பொது நேர்முகப் பரீட்சை**.-

(i) மேற்படி இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகளைப் பரீட்சார்த்தி பூர்த்திசெய்துள்ளாரா என்றும் அத்தகைய தகைமைகள் அதில் காட்டப்பட்ட குறிப்புரைகளுக்குள் அமைகின்றனவா என்றும் சரிபார்ப்பதற்கு பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) பொது நேர்முகப் பரீட்சைச் சபையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

**கவனிக்க வேண்டியது**.- நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதனால் நியமனம் வழங்கப்படுதவதற்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

13.3 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.result.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

*14.* **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்**.-

(1) **நுண்ணறிவுப் பரீட்சை**.-விண்ணப்பதாரிஎண்கள்,மொழிசார் மற்றும் உருவவடிவங்கள்,இடைத்தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிபுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது, பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடையளிக்கக்கூடிய வினாக்கள் 50 இடம்பெறும் அனைத்திற்கும் பதில் எதிர்பார்க்கப்படுகின்றன. கொடுக்கப்படும் வினாத்தாளிலேயே அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும் (காலம் : 1 மணித்தியாலம்)

(2) **மொழித்திறன்** .- இலக்கணம், சுருக்கம், பொருள் விளக்கம், தெளிவான மொழி நடை மற்றும் மொழித் திறன் மூலம் பெற்றுக்கொண்ட அறிவினை அளவிடுவதற்கு சுருக்கமாக விடையளித்தல், கட்டுரை வரைதல் மற்றும் பந்தியினை வாசித்து அதன் மூலம் வினவப்படும் வினாக்களுக்கு விடையளித்தல் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. கொடுக்கப்படும் வினாத் தாளிலேயே அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும். (காலம் : 02 மணித்தியாலங்கள்)

(3) **புகையிரத பாதுகாவலர் சட்டம், புகையிரத இயக்கம் மற்றும் வர்த்தக பிரமாணங்கள்** .- புகையிரத பாதுகாவலர் சட்டம், புகையிரத இயக்கம் மற்றும் வர்த்தக பிரமாணங்கள், புகையிரத நிதி முறைமை மற்றும் திணைக்கள விதிக்கோவை ஆகியவற்றின் விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதற்கு கட்டுரை வரைதல் மற்றும் பந்தியினை வாசித்து அதன் மூலம் வினவப்படும் வினாக்களுக்கு விடையளித்தல் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. கொடுக்கப்படும் வினாத்தாளிலேயே அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும். (காலம் : 02 மணித்தியாலங்கள்)

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இப்பிரசுரத்தில் மொழிகளுக்கிடையில் வேறுபாடு இருப்பின் அல்லது மூன்றிற்கும் இடையில் தொடர்பில்லா தன்மை காணப்படின் சிங்களத்தில் பிரசுரிக்கப்படும் வர்த்தமானி விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜீ. எஸ். விதானகே,
செயலாளர்,
போக்குவரத்து மற்றும் சிவில்
விமான சேவைகள் அமைச்சு.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,
7 ஆவது மாடி,
செத்சிறிபாய,
II ஆம் கட்டம்,
பத்தரமுல்லை,
2018, யூலை 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கைப் புகையிரதத் திணைக்களம்**

இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்/போக்குவரத்து) தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017 (2018)

Open Competitive Examination For Recruitment to Executive Service Category of Grade III of Assistance Superintendent (Commercial/ Transportation) in Sri Lanka Railway Department - 2017 (2018)

பரீட்சை மொழி ஊடகம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி ஊடகத்தில் விண்ணப்பமானது நிரப்பப்படல் வேண்டும்.

1.0 தனிப்பட்ட தகவல்கள் :----.

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம்: GUNAWARADHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :----.

1.5 நிரந்த முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.6 பால் ஆண் - 0 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்) ☐
பெண் - 1

1.7 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐

1.8 விவாக நிலை : (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)
விவாகமாகாதவர் - 1 ☐
விவாகமானவர் - 2

1.9 இனம் : (சிங்களம் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையோர் - 5) (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்) ☐

1.10 பிறந்த திகதி :-
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

1.11 தகைமைகளை பூர்த்திசெய்யும் 2018.09.28 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

1.12 கையடக்க தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2.0 (i) பட்டம் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம் நிறுவகம் :----.
(iii) பதிவிலக்கம் :----.
(iv) உள்வாரி/வெளிவாரி :----.
(v) பட்டம் :----.
(vi) பாடங்கள் :----.
(vii) வகுப்பு :----.
மேல்/கீழ் :----.
(viii) பட்டம் வலுப்பெறும் திகதி :----.
(ix) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றிய மொழி ஊடகம் :----.

3.0 பரீட்சைக் கட்டணத்தை செலுத்துதல் :

பரீட்சைக் கட்டணம் :

(i) செலுத்தும் இடம் :----.
(ii) செலுத்தப்பட்ட பணம் :----.
(iii) பற்றுச்சீட்டு இல. :----.
(iv) செலுத்தப்பட்ட திகதி :----.

(விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச்சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.)

4.0 பரீட்சார்த்தியின் உறுதியுரை :

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் அமைய இத்திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எனக்கு தகுதியுள்ளது என்றும் எனது அறிவுக்கு எட்டியவரை இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .......... ஆந் திகதிய .......... ஆம் இலக்க பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன். இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புக்கு இணங்க நான் தகுதியற்ற ஒருவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான தீர்மானித்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும் இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

5.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

(வர்த்தமானி அறிவித்தலின் 7 (ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற .................................. (முழுப்பெயர்) என்பவர் எனக்கு நன்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் .................................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற அலுவலரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
( உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

6.0 *திணைக்களத் தலைவரின் சான்றுரை* : (மத்திய அரசாங்க/மாகாண அரசாங்க/அரச கூட்டுத்தாபன சேவையில் பணி புரியும் அலுவலர்களுக்கு மட்டும்)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி.................................. எமது திணைக்களத்தில்/ அமைச்சில்/ அலுவலகத்தில் .................................. என்ற பதவியில் சேவையாற்றுகின்றார். அவரின் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து முன்வைக்கின்றேன். இந்நியமனம் அவருக்கு கிடைக்கப்பெற்றால் இங்கு அவர் வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
( உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

8-1030/2

## கல்வி அமைச்சு

### நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் சமயப் பாடங்களைக் கற்பிப்பதற்காக நிலவும் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3-II தரத்திற்கு தர்மாசிரியர் பரீட்சைகளில் சித்தியடைந்தோரை சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2018

நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் சமயப் பாடங்களைக் கற்பிப்பதற்காக காணப்படும் சிங்கள, தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3-II தரத்திற்கு சேர்த்துக் கொள்வதற்காக தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகள் ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் வர்த்தமானி அறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் 2018.09.28ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "சமயப் பாடங்களைக் கற்பிப்பதற்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3-II தரத்திற்கு தர்மாசிரியர் பரீட்சைகளில் சித்தியடைந்தோரை சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2018" எனக் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலமொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலமொழியிலும் குறிப்பிட வேண்டும்.

**குறிப்பு** – விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான கடிதம் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் தினம் வரை விண்ணப்பப்படிவத்தைத் தாமதிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

02. **சேவைக்கு சேர்த்துக் கொள்வதற்கான முறைமைகள்**:

2.1. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையில் சகல வினாப் பத்திரங்களுக்கும் தோற்றி ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் 40% தை விடக் குறையாத புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்காக மாகாண மட்டத்திலும், தேசிய பாடசாலைகளுக்காக தேசிய மட்டத்திலும் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையைப் போன்று 03 மடங்கு எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

2.2. நேர்முகப் பரீட்சையில் தகைமை பெறுவோர் தொழிலின் முக்கியத்துவம் வாய்ந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக விண்ணப்பதாரியிடம் காணப்படும் திறமைகளை அளவீடு செய்வதற்காக இவ் வர்த்தமானி அறிவித்தலின் 13.3 ஆவது வாசகத்திற்கமைய பிரயோகப் பரீட்சைக்குட்படுத்தப்படுவர். விண்ணப்பதாரியினால் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முறைமைக்கமைய காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு இணங்க ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையற்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையின் போது நிராகரிக்கப்படுவர்.

2.3. பிரயோகப் பரீட்சை நடாத்தப்படுவதற்கு முன் விண்ணப்பதாரிகளுக்கு உரிய வெற்றிடப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும். அதன் பிரகாரம் விண்ணப்பதாரிகளினால் அச்சந்தர்ப்பத்தில் வெற்றிடம் காணப்படும் பாடசாலைகளுக்கு தங்களது நியமனம் பெறுவதற்கான விருப்பத்தினை தொடரொழுங்கில் குறிப்பிட வேண்டும்.

2.4. இவ் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வது பாடசாலை மட்டத்திலான முறைமையை அடிப்படையாகக் கொண்டதனால் நியமனம் பெறுகின்ற திகதியிலிருந்து 05 ஆண்டுகள் வரை எக்காரணம் கொண்டும் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது.

03. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**:

(i) இப் பதவி நிரந்தரமானது. பதவிக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்குட்பட வேண்டும்.

(ii) இப் பதவிக்கு நியமனம்பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்குட்படுவதுடன் அம் மூன்று (03) ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டும்.

(iii) பொதுநிருவாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளுக்கமைய அரச கருமமொழி தொடர்பில் தேர்ச்சியை தாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(iv) அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரச நிதி ஒழுங்குகளுக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந் நியமனம் உட்பட்டிருக்கும்.

(v) 2014.10.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/38 ஐக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஒழுங்கு விதிமுறைகளுக்கும் அச் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கும் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங் களுக்கும் அரச சேவையின் நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்படுகின்றது.

04. **சம்பள அளவு**: இப் பதவிக்கு பொதுநிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 3/2016 ஐக் கொண்ட சம்பளச் சுற்றறிக்கைக்கமைய GE 01-2016 இல் ரூபா 27×740-300×6-380×7-445×2-ரூபா 33,090 (மாதாந்தம்) சம்பள அளவு உரித்தாகும். இந் நியமனதாரிகள் இச்சம்பள அளவில் ஆரம்ப சம்பளப் படிநிலையாக ரூபா 27,740 மாதாந்தச் சம்பளத்திற்கமைய அமர்த்தப்படுவார்கள். சம்பளக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது இச் சுற்றறிக்கை II இன் உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமையவாகும். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத்திற்குக் காலம் செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் நியமனதாரிகளுக்கு உரித்தாகின்றது.

05. **கல்வித் தகைமை**:-

5.1. இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் குறிப்பு 06 இன் படி கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியைப் பாடமாகச் சித்தியடைந்திருக்க வேண்டும்.

5.2. க.பொ.த. (உ.த) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்கள் (பொது சாதாரண பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

5.3. மேற்கூறப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியான 2018.09.28ஆம் திகதியன்று கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூரணப்படுத்தி இருக்க வேண்டும்.

(அ) பௌத்த சமயப் பாடத்திற்காக பௌத்த தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
(ஆ) கத்தோலிக்க சமயப் பாடத்திற்காக கத்தோலிக்க தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
(இ) கிறிஸ்தவ சமயப் பாடத்திற்காக கிறிஸ்தவ அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந் திருத்தல்.
(ஈ) இந்து சமயப் பாடத்திற்காக இந்து தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
(உ) இஸ்லாம் சமயப் பாடத்திற்காக மௌலவி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

06. **வயது எல்லை** .- விண்ணப்பதாரிகள் 2018.09.28 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

07. **ஏனைய தேவைகள்**:

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.
(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பப்படிவங்களை கோரும் இறுதித் திகதியன்று பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(iv) சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதியளவு உடல் உளத் தகைமைகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

08. **விண்ணப்பிக்கும் முறை**:

8.1. விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் A4 அளவு கடதாசியின் இரு பக்கத்தையும் பயன்படுத்தித் தயாரித்து விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட வேண்டும். 1 தொடக்கம் 9 வரையான தலைப்பு முதலாவது பக்கத்திலும், 10 தொடக்கம் எஞ்சியவைகளை மேலதிக பக்கத்திலும் உள்ளடக்கக் கூடியவாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும் என விசேடமாக கவனத்தில் கொள்ளவும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும்,

சரியாகப் பூர்த்தி செய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும் என்பதினால் விண்ணப்பப்படிவம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கி பற்றுசீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலும் மீண்டும் ஆராயவும். (விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி மற்றும் நிதி செலுத்திய பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.)

8.2. ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடிவதுடன், அது தேசிய பாடசாலை அல்லது மாகாணப் பாடசாலை ஆகிய இரு வகைகளில் ஒரு பாடசாலை வகைக்கு மாத்திரம் இருக்க வேண்டும். விண்ணப்பிப்பது தேசிய பாடசாலையா, மாகாணப் பாடசாலையா என்பது குறித்து விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டினுள் குறிப்பிட வேண்டியதுடன், அவ்வாறு பெயர் குறிக்கப்படும் விருப்பத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது. மாகாணப் பாடசாலை விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் விண்ணப்பிக்கும் மாகாணத்திற்குள் 03 வருடங்கள் நிரந்தரமாக வசித்திருக்க வேண்டும்.

8.3. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஏதேனும் ஒரு நிறுவனத்தினால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர் ஊடாகவும், அவ்வாறின்றேல் விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை அரச பாடசாலை அதிபர்/ ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்/ கோட்டத்தின் கிராம அலுவலர்/ சமாதான நீதவான்/ சத்திய ஆணையாளர்/ சட்டத்தரணி/பகிரங்க நொத்தாரிசு/முப்படை அதிகாரத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்/பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 240,360 க்கு மேற்பட்ட அடிப்படை வருடாந்தச் சம்பளத்தைப் பெறும் அரசின் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது ஏனைய சமயங்களின் சமயத் தலைவர்கள் அல்லது வணக்கஸ்தலம் ஒன்றிற்குப் பொறுப்பான சமயப் பொறுப்பாளர்களில் குறிப்பிடத்தக்க தரத்தினைக் கொண்ட ஒருவர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

8.4. மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கு ஒவ்வாத மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடும்போது விண்ணப்பப்படிவம் காணாமல்போதல் அல்லது தாமதித்துக் கிடைப்பது தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8.5. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்தீர்மானங்களுக்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையில் விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரியதான பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக் கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டவுடன் அதுபற்றி பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவுறுத்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப் பத்திரம் கிடைக்காத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின் அவ் விபரங்களுடன் பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியை துரித கதியில் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் ஒன்று 0112784232 எனும் பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது பயன்மிக்கதாகும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் எந்தத் தகவல்களையும் உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தைத் தபாலிடும்போது பதிவு செய்த பற்றுச்சீட்டினை தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும்.

09. **பரீட்சைக்குத் தோற்றுதல்:-**

9.1. விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தின் மண்டபப் பொறுப்பாளருக்கு தமது ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.2. பரீட்சார்த்தி தமக்கு உத்தரவிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல பாரீட்சார்த்திகளும் உரிய பரீட்சைகளுக்குரியதான அனுமதிப் பத்திரங்களில் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் உள்ள மண்டபப் பொறுப்பாளருக்குக் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உட்பட வேண்டி ஏற்படும்.

**குறிப்பு** : பரீட்சார்த்திக்குப் பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனக் கொள்ளப்படமாட்டாது என்பதோடு பரீட்சையில் சித்தியடைதல் நியமனம் பெறுவதற்கு தகுதி ஒன்றாகக் கொள்ளப்படமாட்டாது.

10. **விண்ணப்பதாரியின் அடையாளங்கள்**: தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக் கூடியவாறு பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காகக் கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

11. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்**: விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகுந்த கவனத்துடன் உண்மையான தகவல்களை வழங்க வேண்டும். பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்த்தை இரத்துச் செய்ய இடமுண்டு.

12. **பரீட்சை முறைகள் மற்றும் பரீட்சை மொழி**:

12.1 இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் மட்டும் உப அட்டவணை இலக்கம் 05இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைந்துள்ள பரீட்சை மண்டபங்களில் மாத்திரம் நடாத்தப்படும். ஏதாவது நகரொன்றில் பரீட்சை நிலையம் அமைப்பது தொடர்பாக குறிப்பிட்டளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, அவ்விண்ணப்பதாரிகள் கிட்டிய வேறு நகரிற்கு அல்லது கொழும்பு நகரில் அல்லது ஏற்படுத்தப்படுகின்ற வேறு பரீட்சை நிலையத்திற்கோ அனுப்பி வைக்கப்படுவர்.

12.2 சகல விண்ணப்பதாரிகளும் இப்பரீட்சையின் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டியது ஒரு மொழி மூலம் மாத்திரமாகும். அம் மொழியானது தாம் நியமனம் பெறுவதற்கு உரிய மொழி மூலமாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரியின் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

12.3 எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளைக் கட்டாயமாகப் பெற்று இரு பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும்.

13. **பாட விதானம்**.- இப்பரீட்சை பின்வரும் 13.1 மற்றும் 13.2 என்ற வினாப்பத்திரங்கள் இரண்டைக் கொண்டதாகும். சகல விண்ணப்பதாரிகளும் அவ் வினாப்பத்திரங்கள் இரண்டுக்கும் தோற்றுதல் கட்டாயமாகும்.

13.1. ***நுண்ணறிவுப் பரீட்சை*** .- நேரம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)
பரீட்சார்த்தியிடம் ஆசிரியர் தொழிலுக்கான தகைமைகள் மற்றும் தர்க்க ரீதியிலான அறிவு, தீர்மானம் எடுப்பதற்கான இயலுமைகளை அளவீடு செய்யும் நோக்கில் இவ்வினாத்தாள் தயாரிக்கப்படுகின்றது. இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக்கூடிய 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல விண்ணப்பதாரர்களும் இவ் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்க வேண்டும்.

13.2 ***பொது அறிவு*** .- நேரம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)
ஆசிரியர் துறைக்குரியதாக அத்துறை தொடர்பிலான பொது அறிவு மற்றும் / அல்லது உள்நாட்டு ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்படும் கல்விப்போக்கு தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வியினை நவீன மயப்படுத்தல் தொடர்பான பொது அறிவினை எதிர்பார்க்கும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக்கூடிய வகையில் 50 வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். இச்சகல கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.

13.3 ***பொதுவான நேர்முகப் பரீட்சை*** .- பொதுவான நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு** : மேற்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் - சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்குரியதாக பகிரங்கப் படுத்தப்படும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசோதனை செய்தல் மற்றும் உடற்தகைமைகளைப் பரிசோதனை செய்தல்.

13.4. ***பிரயோகப் பரீட்சை.*-** பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக 05 நிமிடங்களை விடக் குறையாத காலம் வழங்கப்படும். இதற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

**மேற்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கம்-** ஆசிரியர் தொழிலில் முக்கியத்துவம் வாய்ந்த கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளுக்குள்ள தகைமைகள் அளவிடப்படும்.

| *தொ. இல.* | *பிரயோகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் ஒப்பளவுகள்* | *உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவு* | *சித்தியடையத் தேவையான புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 01 | நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடலின் தெளிவுகள் | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | சமர்ப்பிக்கும் நுட்பமுறைகள் | 05 | 02 |
| | **மொத்தப் புள்ளிகளின் அளவு** | **25** | **10** |

14. **பரீட்சைக் கட்டணம்:-**

14.1. பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இக் கட்டணம் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பெயரில் எந்தவொரு தபால் நிலையம்/ உப தபால் அலுவலகத்தில் நிதி செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு விண்ணப்பதாரியினால் உரிய இடத்தில் ஒட்டி அப்பற்றுச் சீட்டின் இலக்கத்தைக் குறிப்பிடவும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்) பரீட்சைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக எதுவித கட்டணங்களும் பொறுப்பேற்கப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளத் திருப்பிச் செலுத்த அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றியமைக்கப்படமாட்டாது.

15. **பரீட்சைப் பெறுபேறுகள்.-** எழுத்து மூலப் பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் செயலாளர், கல்வி அமைச்சிற்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவிக்கப்படும். அல்லது www.results.exam.gov.lk என்ற இணையத்தளம் ஊடாக பகிரங்கப்படுத்தப்படும்.

16. **விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள்.-** விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணை 01, 02, 03, 04 மற்றும் 05ஐ மாத்திரம் பயன்படுத்தவும்.

***அட்டவணை 01***

| *மொழி மூலம்* | *குறியீட்டு இலக்கம்* |
|---|---|
| சிங்கள மொழி | 2 |
| தமிழ் மொழி | 3 |

***அட்டவணை 02***

| *பாடங்கள்* | *குறியீட்டு இலக்கம் (சிங்கள மொழி)* | *குறியீட்டு இலக்கம் (தமிழ் மொழி)* |
|---|---|---|
| பௌத்த சமயம் | 1.1 | 1.2 |
| கத்தோலிக்க சமயம் | 2.1 | 2.2 |
| கிறிஸ்தவ சமயம் | 3.1 | 3.2 |
| இந்து சமயம் | - | 4.2 |
| இஸ்லாம் சமயம் | 5.1 | 5.2 |

**அட்டவணை 03**

| பாடசாலை வகை | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| தேசிய பாடசாலை | 1 |
| மாகாணப் பாடசாலை | 2 |

**அட்டவணை 04**

| மாகாணம் | மாகாண இலக்கம் |
|---|---|
| மேல் மாகாணம் | 01 |
| மத்திய மாகாணம் | 02 |
| வட மாகாணம் | 04 |
| சப்பிரகமுவ மாகாணம் | 09 |

**அட்டவணை 05**

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| யாழ்ப்பாணம் | 07 |
| மன்னார் | 08 |
| வவுனியா | 09 |
| முல்லைத்தீவு | 10 |
| கிளிநொச்சி | 11 |
| பதுளை | 12 |
| மொனராகலை | 13 |
| இரத்தினபுரி | 14 |
| கேகாலை | 15 |

**வெற்றிட அட்டவணை**

| மொழி | தேசிய /மாகாண | மாகாணம் | பௌத்த சமயம் | கத்தோலிக்க சமயம் | கிறிஸ்தவ சமயம் | இந்து சமயம் | இஸ்லாம் |
|---|---|---|---|---|---|---|---|
| சிங்களம் | தேசிய பாடசாலை | | √ | √ | √ | - | √ |
| | மாகாணப் பாடசாலை | 1 மேல் | √ | √ | - | - | √ |
| | | 2 மத்தி | √ | - | √ | - | √ |
| | | 3 வடக்கு | √ | - | - | - | - |
| தமிழ் | தேசிய பாடசாலை | | - | √ | √ | √ | √ |
| | மாகாணப் பாடசாலை | 1 மேல் | √ | √ | - | √ | √ |
| | | 2 மத்தி | - | √ | √ | √ | √ |
| | | 3 வடக்கு | - | √ | √ | √ | √ |
| | | 4 சப்பிரகமுவ | - | √ | √ | √ | √ |

17. தற்போது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 13.0 தலைப்பின் கீழ் தமது திணைக்களப் பொறுப்பாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

18. நேர்முகப் பரீட்சைக்காக உரிய தினத்தில் பங்கேற்காத விண்ணப்பதாரர்கள் தொடர்பில் எக்காரணம் கொண்டும் மீளக் கருத்திற் கொள்ளப்படமாட்டது.

19. அத்துடன் நேர்முகப் பரீட்சை தினமன்று சகல சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டியதுடன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

20. இவ் அறிவித்தலில் உட்படாத விடயங்கள் இருப்பின் அது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமையும், ஏதேனும் வெற்றிடங்களில் ஒரு பகுதி அல்லது முழுமையாக நிரப்ப அல்லது நிரப்பாது இருப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

21. சிங்களம், தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடு இன்மைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

சுனில் ஹெட்டியாரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு, இசுருபாய,

பெலவத்த, பத்தரமுல்ல,
2018, ஓகத்து 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐
(அலுவலகப் பயன்பாட்டுக்காக)

**கல்வி அமைச்சு**

நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் சமயப் பாடங்களைக் கற்பிப்பதற்காக நிலவும் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை 3- II தரத்திற்கு தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தோரை சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2018

1. வெற்றிடத்திற்காக விண்ணப்பித்தல் :
   - 1.1 வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் பாடசாலை வகை ☐ (அட்டவணை இலக்கம் 3 ஐ பயன்படுத்தி உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)
   - 1.2 வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் மாகாணம் ☐ (அட்டவணை இலக்கம் 4 ஐ பயன்படுத்தி உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)
   - 1.3 வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் நகரம் ☐ (அட்டவணை இலக்கம் 5 ஐ பயன்படுத்தி உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)

(ஒரு விண்ணப்பதாரி தேசிய பாடசாலை அல்லது மாகாணப் பாடசாலை ஆகிய இரண்டு வகைகளில் ஒரு பாடசாலை வகைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். 1.2 தேசிய பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்போருக்கு பொருத்தமற்றது.)

2. விண்ணப்பிக்கும் மொழி மூலத்திற்காக அட்டவணை 1 ஐப் பயன்படுத்தி உரிய குறியீட்டு இலக்கத்தினை கூட்டினுள் குறிப்பிடவும்.

மொழி மூலம் : ☐

3. விண்ணப்பிக்கும் பாடத்திற்கான பாடம் மற்றும் உரிய குறியீட்டு இலக்கத்தினைக் குறிப்பிடவும். (அட்டவணை 2 ஐப் பயன்படுத்தவும்.)

| பாடம் | பாடக் குறியீட்டு இலக்கம் |
|---|---|
| | |

4. 4.1 முழுப் பெயர் : (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உ-ம். : AMRAKOON MUDIYANSELAGE NAMAL HERATH) :----.

4.2. இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு பெயர் (உ-ம். : HERATH A.M.N.) :----.

4.3. முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

5. தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (அனுமதிப்பத்திரம் இம்முகவரிக்குத் தபாலிடப்படும்) :----.

6. 6.1 தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

6.2 தொலைபேசி இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. பால் (ஆண்/ பெண்) :- பெண் - 1
ஆண் - 0 (உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)

8. 8.1. திருமணமானவர்/திருமணமாகாதவர்:- திருமணமாகாதவர் - 1, திருமணமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

8.2. பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8.3. 2018.09.28 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

9. கல்வித் தகைமை தொடர்பான விபரங்கள் :-

| க.பொ.த. (சா.த.) பரீட்சை | | | | க.பொ.த. (உ.த.) பரீட்சை | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு: | | பரீட்சை இலக்கம்: | | ஆண்டு: | பரீட்சை இலக்கம் : |
| பாடங்கள் | பெறுபேறு | பாடங்கள் | பெறுபேறு | பாடங்கள் | பெறுபேறு |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

10.0 சித்தியடைந்துள்ள பௌத்த தர்மாசிரியர் பரீட்சை/ கத்தோலிக்க தர்மாசிரியர் பரீட்சை/ கிறிஸ்தவ சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் பரீட்சை/ இந்து தர்மாசிரியர் பரீட்சை/ மௌலவி சான்றிதழ் பரீட்சை தொடர்பான விபரங்கள் :-

10.1. பரீட்சை சித்தியடைந்த வருடம் :

10.2. பெறுபேறு செல்லுபடியாகும் திகதி :

10.3. தொடர்ந்துள்ள பாடங்கள் சித்தி நிறுவனம்

| தொடர்ந்துள்ள பாடங்கள் | சித்தி | நிறுவனம் |
|---|---|---|
| ................................ | ........................ | ................................ |
| ................................ | ........................ | ................................ |
| ................................ | ........................ | ................................ |
| ................................ | ........................ | ................................ |
| ................................ | ........................ | ................................ |

11.0 பரீட்சைக் கட்டணம் செலுத்துவது தொடர்பான விபரங்கள் :

11.1. செலுத்தப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் ரூபா (எழுத்தில்) :----.
11.2. பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
11.3. வழங்கிய தபால் /உப தபால் அலுவலகம் :----.
11.4. திகதி :----.

நிதி செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தாங்கள் வைத்துக்கொள்ளவும். நிதிப் பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில் உண்மையானது எனத் தெரிவிக்கிறேன். இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகத் தெரிவிக்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்னர் மாற்றியமைக்கமாட்டேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்** :-

இவ் விண்ணப்பப்படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி. ............................................................... ........ ............................................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிந்துள்ளேன் என்றும், அவர் என் முன்னிலையில் .................................. ஆந் திகதி ஒப்பமிட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளதாகவும், அதன் பற்றுசீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

13.0 விண்ணப்பதாரி அரச ஊழியராயின் திணைக்களப் பொறுப்பாளரின் உறுதியுரை :-

திரு./திருமதி/செல்வி ............................................................................................................ அவர்களின் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கிறேன். அவர் அமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர/ தற்காலிக/ சமயாசமய ஊழியராகச் சேவையாற்றுவதாகவும் இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் அறியத்தருகிறேன்.

-----,
திணைக்கள தலைவரின் அல்லது
அதிகாரம் பெற்றவரின் கையொப்பம்.

பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

8-1136

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### மருத்துவ விடயங்களுக்கான தாதியர், நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையின் பயிற்சிகளுக்கு பயிலுநர்கள் தெரிவு செய்தல் - 2018

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான தாதியர், நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையின் பின்வரும் கற்கைநெறிகளுக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமை கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

| தொடர் இலக்கம் | சேவை | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சிக் காலம் | பயிற்சியை தொடர வேண்டிய மொழி |
|---|---|---|---|---|
| 1. | தாதி | தாதி உத்தியோகத்தர் | 03 வருடங்கள் | ஆங்கிலம் |
| 2. | நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவை | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 3. | | மருந்தாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 4. | | தொழில்வழி சிகிச்சையாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 5. | | கதிரியலாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 6. | துணை மருத்துவ சேவை | பாடசாலை பற்சிகிச்சையாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 7. | | சுகாதார பூச்சியியல் அலுவலர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 8. | | கண் தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 9. | | செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர் | 03 வருடங்கள் | ஆங்கிலம் |
| 10. | | பொது சுகாதார பரிசோதகர் | 1 1/2 வருடங்கள் | சிங்களம், தமிழ் |
| 11. | | இதயத்துடிப்பு பதிவாளர் | 01 வருடம் | ஆங்கிலம் |
| 12. | | மூளை மின் இயக்கப் பதிவாளர் | 01 வருடம் | ஆங்கிலம் |

அட்டவணை இலக்கம் 01

02. **கல்வி மற்றும் பதவிக்கு உரித்தான ஏனைய விஷேட தகைமைகள்** :

| தொடர் இலக்கம் | பயிற்சி நெறி | க.பொ.த. (சா.த.) பெறுபேறு | க.பொ.த. (உ.த.) பெறுபேறு | பயிற்சிக்கான விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01. | தாதி அலுவலர் | சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க. பொ. த. (சாதாரண) தரம் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ.த. (உ.தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவிற்குரிய உயிரியல், இரசாயனவியல், விவசாயவியல், பௌதிகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் 03 இல் தோற்றி அனைத்து பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)<br>அல்லது<br>2016 மற்றும் 2017 ஆகிய வருடங் களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. தர) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானத் துறைக்குரிய இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் 03 இல் தோற்றி அனைத்து பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் (பொது அறிவுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) | 2018.09.21 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>உயரம் 04 அடி 10 அங்குலத்திற்கு (147.3 cm) குறையாதிருத்தல்.<br><br>திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.<br>ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும். |
| 02. | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் **இரசாயனவியல் பாடத்தில்** திறமைச்சித்தியுடன், பௌதிகவியல், உயிரியல், விவசாயம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு 02 பாடங்களுடன் மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். | 2018.09.21 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஆண்/ பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும். |

| தொடர் இலக்கம் | பயிற்சி நெறி | க.பொ.த. (சா.த.) பெறுபேறு | க.பொ.த. (உ.த.) பெறுபேறு | பயிற்சிக்கான விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 03. | மருந்தாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங் கில பாடத்தில் சித்தி பெற் றிருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் **இரசாயனவியல் பாடத்தில்** திறமைச் சித்தியுடன், பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு 02 பாடங்களுடன் மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல். | 2018.09.21 ஆந் திகதி க்கு 18 வயதிற்கு குறையா மலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஆண்/பெண் இருபாலா ருக்கும் விண்ணப்பிக்க முடியும். |
| 04. | தொழில்சார் சிகிச்சையாளர் | சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ் ஞானம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங் கில பாடத்தில் சித்தி அடைந் திருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் **பௌதிகவியல் பாடத்தில்** திறமைச் சித்தியுடன், இர சாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு(02)பாடங்களுடன் மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல். | 2018.09.21 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையா மலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஆண்/ பெண் இருபாலா ருக்கும் விண்ணப்பிக்க முடியும். |
| 05. | கதிரியலாளர் | சிங்கள மொழி, தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞா னம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தி யுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் மற்றும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி அடைந்திருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் **பௌதிகவியல் பாடத்தில்** திறமைச் சித்தியுடன், இர சாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு (02)பாடங்களுடன் மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல். | 2018.09.21 ஆந் திகதி க்கு 18 வயதிற்கு குறை யாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஆண்/பெண் இருபாலாரு க்கும் விண்ணப்பிக்க முடியும். |

| தொடர் இலக்கம் | பயிற்சி நெறி | க.பொ.த. (சா.த.) பெறுபேறு | க.பொ.த. (உ.த.) பெறுபேறு | பயிற்சிக்கான விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 06. | பாடசாலை பல் சிகிச்சை யாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திற மை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் **உயிரியல் விஞ்ஞானத்தில்** திறமைச் சித்தியுடன், இரசா யனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதா வது இரண்டு (02) பாடங் களுடன் மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர் வில் சித்தியடைந்திருத்தல். | 2018.09.21 ஆந் திகதி க்கு 18 வயதிற்கு குறை யாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>பெண்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.<br>உயரம் 4 அடி 10 அங்கு லம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண் டும்.<br>விவாகம் ஆகாதவராக இருக்க வேண்டும். |
| 07. | சுகாதார பூச்சியியல் அலு வலர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற் றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தி யுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் **உயிரியல் விஞ்ஞானத்தில்** திறமைச் சித்தியுடன், பௌதிகவிய லில், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதா வது இரண்டு (02) பாடங் களுடன் மூன்று (03) பாடங் களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல். | 2018.09.21 ஆந் திகதி க்கு 18 வயதிற்கு குறை யாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். |
| 08. | கண் தொழில்நுட்ப வியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திற மைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் **பௌதி கவியல் பாடத்தில்** திற மைச் சித்தியுடன், பௌதி கவியல், இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ் ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல். | 2018.09.21 ஆந் திகதி க்கு 18 வயதிற்கு குறை யாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>ஆண் /பெண் இருபா லாருக்கும் விண்ணப் பிக்க முடியும். |

| தொடர் இலக்கம் | பயிற்சி நெறி | க.பொ.த. (சா.த.) பெறுபேறு | க.பொ.த. (உ.த.) பெறுபேறு | பயிற்சிக்கான விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 09. | செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர் | விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் **பௌதிகவியல்/உயிரியல்** பாடத்தில் திறமைச் சித்தியுடன், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | 2018.09.21 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும். |
| 10. | பொது சுகாதார பரிசோதகர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் **உயிரியல் விஞ்ஞானம் அல்லது இணைந்த கணிதம்** ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியுடன், பௌதிகவியல், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | 2018.09.21 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>ஆண்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.<br>உயரம் 5 அடி 2 அங்குலம் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும். (157.46 cm) |
| 11 | இதயத்துடிப்பு பதிவாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய இரண்டு (02) பாடங்களில் சாதாரண சித்தியுடன் மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | 2018.09.21 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும். |

| தொடர் இலக்கம் | பயிற்சி நெறி | க.பொ.த. (சா.த.) பெறுபேறு | க.பொ.த. (உ.த.) பெறுபேறு | பயிற்சிக்கான விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 12 | மூளை மின் இயக்க பதிவாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் **உயிரியல் பாடத்தில்** திற மைச்சித்தியுடன் பௌதிக வியல், இரசாயனவியல் ஆகிய இரண்டு (02) பாடங் களுடன் மூன்று (03) பாடங் களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | 2018.09.21 ஆந் திகதி க்கு 18 வயதிற்கு குறை யாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஆண்/ பெண் இருபாலா ருக்கும் விண்ணப்பிக்க முடியும். |

3. **கற்கை நெறிக்குரிய விசேட விடயங்கள் :**

3.1 ***மாணவ தாதியர் பயிற்சிக்கு உரித்தான விடயங்கள் :***

3.1.1. மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு 2013.11.19 ஆந் திகதிய 1817/ 8 எனும் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தாதியர் சேவைக்கான சேவைப்பிரமானக் குறிப்பு மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடம் மேற்கொள்ளப்படும். (ஆண் விண்ணப்பதாரிகளின் ஆட்சேர்ப்பு தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் நியதிகளின் கீழ் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தேவையினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.)

3.1.2. நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட த்திலும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு சனத்தொகையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

3.1.3. அதன் பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாவட்டத்தில் ஒவ்வொரு வருடத்திலும் விண்ணப்பித்து தேவைப்படும் குறைந்தபட்ச விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசரத்திற்கு பிரிக்கப்பட்டு குறித்த மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு வருடமும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.1.4. அதன்பின்னர் அந்த ஒவ்வொரு வருடத்திலும் ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை அவ்வருடத்தில் உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் பாடத்துறைகளின் கீழ் விண்ணப்பித்து பொதுவான நேர்முகப்பரீட்சையின் பின்னர் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு உரிய மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.1.5. அவ்வாறு ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்பட்டு அவ்வெண்ணிக்கையில் 5% ஆண் விண்ணப்பதாரிகளையும், 95% பெண்

விண்ணப்பதாரிகளையும் உள்ளடக்கியதாக ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் மாவட்டத்தின் அதிகூடிய Z பெறுமதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகளில் இருந்து பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படும்.

3.2. ***நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவை பயிற்சிக்கு உரித்தான விடயங்கள்*** :

3.2.1. நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திட்டத்தில் மற்றும் அதில் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கு அமைய தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளில் இருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன், விண்ணப்பதாரிகளின் க. பொ. த. (உ. த.) Z பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

3.2.2. நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் சனத்தொகையை அடிப்படையாகக்கொண்டு சனத்தொகையின் விகிதாசரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப் படும்.

3.2.3. அதன்பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாவட்டத்தில் ஒவ்வொரு வருடத்திலும் விண்ணப்பித்து குறைந்த கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொரு வருடமும் ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.3. ***பொதுவான விடயங்கள்*** :

3.3.1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

3.3.2 சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடற்தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

3.3.3. பதவிக்குரிய கடமைகளை செய்வதற்கு போதியளவு உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

3.3.4. விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;

3.3.5. சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

3.3.6. பயிற்சியின் பின்னர் மத்திய அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர நியமனம் கிடைத்தால் நீங்கள் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் சேவையாற்றுவதற்கு விருப்பப்படல் வேண்டும். அவ்வாறு சேவை ஆற்றுவதாக சுகாதார சேவையின் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்துக்கு வருதல் வேண்டும்.

3.3.7. தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்ப முடிவுத் திகதியான 2018.09.21 ஆந் திகதிக்கு கிட்டிய 03 வருடங்கள் தொடர்ந்து வசித்து இருக்க வேண்டும். தமது வதிவை உறுதிப்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) 2018.09.21 கிட்டிய முன்னைய 03 வருடங்களுக்குள் அவர் அம்மாவட்டத்தில் 03 வருடங்களாவது தொடர்ந்து வசித்து இருக்க வேண்டும். பிரதேச செயலாளரது மேலொப்பத்துடன் கிராம அலுவலரின் சான்றிதழ்;

(ii) மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் கிட்டிய 03 வருடத்திற்குரிய வாக்காளர் பெயர் பதிவேட்டின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு**.- யாரேனுமோர் விண்ணப்பதாரியின் தகப்பன் அல்லது தாய் அரச, மாகாண அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையிலுள்ள காரணத்தால் அல்லது திருமணம், வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் விண்ணப்பதாரியொருவருக்கு கிட்டிய 03 வருட வதிவை உறுதி செய்யமுடியாத சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும்.

3.3.8 ஒரு மாவட்டத்தில் மேற்குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை அம்மாவட்டத்தில் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை கொண்டு நிரப்ப முடியாத சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கையை நாட்டின் சகல மாகாணங்களுக்கும் இடையே அந்த மாகாணங்களின் சனத்தொகைக்கு ஏற்ப மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும்.

**4. ஏனைய விடயங்கள்.-**

4.1. இப்பாடநெறி முழுநேர பாடநெறியாகும். எனவே ஐந்து வார நாட்கள் மற்றும் சனிக்கிழமை முற்பகலில், பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் அல்லது அரச நிறுவனம் ஒன்றில் வேறு ஏதாவது நிறுவனமொன்றில் முழுநேர கற்கை நெறியை தொடரும் மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியாது. யாரொருவர் இதற்காக விண்ணப்பித்து பின்னர் ஏதாவது சந்தர்ப்பதில் தெரியவருமிடத்து அவரை கற்கை நெறியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசினால் அவருக்காக செலவிட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் முழு நேர கற்கை நெறியைத் தொடரும் ஒருவர் இதற்காக விண்ணப்பிக்க விரும்பினால் பின்வரும் முறைகளைப் பின்பற்றப்படல் வேண்டும். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் நடாத்தப்படும் முழு நேர பயிற்சி நெறியில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4.2 நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் முழு நேர கற்கை நெறிக்காக பதிவு செய்திருப்பின் அல்லது பதிவுசெய்ய இருப்பின் இப்பயிற்சிக்காக இணைய முன்னர் அப்பதிவை இரத்துச் செய்து கொள்ள வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்டு விரிவுரைகளுக்குச் செல்லாது இருப்பினும் நீங்கள் பல்கலைக்கழக மாணவராகவே கருதப்படுவீர்கள் என்பதால் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் தமது பெயரை பதிவில் இருந்து நீக்கிக்கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதி செய்வதற்கும் போதுமான ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

4.3. நீங்கள் யாதேனுமோர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பின் அந்தப் பட்டம் செல்லுபடியாகும் திகதி (Effective Date) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் குறித்த திகதிக்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

4.4 2018.09.21 ஆந் திகதிக்கு பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் நடாத்தப்படும் கற்கை நெறிகளிலோ பதிவு செய்யாதவராக இல்லாதிருப்பினும், ஏதாவது காரணத்தால் மேற்படி பயிற்சிப் பயிலுநர் பதிவு செய்யும் திகதியாகும் போது பதிவு செய்திருப்பின் அவர்களும் மேற்படி பயிற்சிக்கான பதிவை மேற்கொள்ள முன்னர் அந்த கற்கை நெறியின் பதிவை இரத்துச் செய்து கொள்ள வேண்டும்.

4.5 சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் நடாத்தப்படும் முழு நேர பயிற்சி நெறியில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரியாயின், அவர்களும் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டால் அதுவரை பெற்றுக்கொண்டிருந்த பயிற்சிக்காக கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் குறிப்பிடப்பட்டுள்ள நிதி மற்றும் அதுவரையிலும் பெற்றுக்கொண்ட சகல கொடுப்பனவுகள் என்பவற்றை செலுத்தி உரிய பயிற்சியிலிருந்து நீங்கிக் கொண்டால் மாத்திரமே மேற்படி பயிற்சிக்காக பதிவுசெய்யப்படுவர்.

4.6 மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பினும் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் கற்கை நெறிக்கு இணைத்துக்கொள்ளப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற்கொள்ளல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருப்பினும் நீங்கள் போதியளவு Z பெறுமானத்தை பெறாதவிடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திராவிடின், எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவராக கருதப்படுவர்.

4.7 கல்வித்தகைமைகள் மற்றும் ஏனைய சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித்திகதியான 2018.09.21 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**5. விண்ணப்பிக்க வேண்டிய முறை.-**

5.1. மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் அந்த இணையத்தள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2. விண்ணப்பத்தின் உரிய இடத்தில் தேசிய அடையாள அட்டையின் பிரதியை பதிவேற்றுதல் (UPLOAD) வேண்டும்.

5.3. நீங்கள் கற்கை நெறிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணபத்தில் உங்களது விருப்பத்தினை வரிசை கிரமப்படி அந்தந்த கற்கை நெறிகளை தெரிவு செய்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் முதலாவதாக தெரிவு செய்யப்படுகின்ற கற்கை நெறிக்காக இணைய வேண்டும் என்பதுடன், அவருக்கு அடுத்த கற்கை நெறிக்கு இணைந்துகொள்வதற்கு அல்லது வேறு பயிற்சி நெறிக்கு மாறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

5.4. விண்ணப்பதாரி ரூபா 500 பணத்தை இலங்கை வங்கி, தப்ரபேன், இல. 7041318 சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பரீட்சைக் கட்டணம் அறவிடல் எனும் கணக்கிற்கு எந்தவொரு வங்கியிலும் செலுத்துதல் வேண்டும். இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித்தர மாட்டாது என்பதுடன் பிறிதொரு பரீட்சையொன்றுகாக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. இவ்வாறு பணம் வங்கிக்கு வைப்புச்செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணபத்தின் உரிய இடத்தில் பதிவேற்றுதல் (UPLOAD) வேண்டும்.

5.5. இவ்வாறு தங்களினால் வெற்றிகரமாக பதிவேற்றப்பட்ட (UPLOAD) விண்ணபத்தின் அச்சுப் பிரதியொன்றை (PRINT OUT) எடுத்து அதில் உரிய இடத்தில் உங்களது கையொப்பத்தை இட்டு கையொப்பத்தை சான்றுறுதி செய்தல் வேண்டும்.

5.6. தங்களினால் பதிவேற்றப்பட்ட இணையத்தள விண்ணபத்தில் அச்சுப்பிரதியின் கடைசி பக்கத்தில் ஒரே பார் குறியீடு (BAR CODE) பல தடவைகள் அச்சிடப்பட்டுள்ளது. அந்த பார் குறியீடு BAR CODE) எவ்வித பாதிப்புகளும் ஏற்படாதவாறு வெட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள (இலக்கம் 06) இணைப்பின் இடது பக்க முனையில் பெயரிடப்பட்டுள்ள பொருத்தமான ஒரு பார் குறியீட்டை (BAR CODE) மாத்திரம் ஒட்டுதல் வேண்டும். (ஒரு ஆவணத்திற்கு ஒரு பார் குறியீடு (BAR CODE) மாத்திரம் போதுமானது.

**குறிப்பு** : (i) விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது உங்களுக்கு ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 தொடக்கம் 4.15 வரையான காலத்தில் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரவின் தொலைபேசி இலக்கம் 0112693955 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அது தொடர்பான அறிவுறுத்தல்களை பெற முடியும்.

(ii) அவ்வாறே, வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 தொடக்கம் 4.15 வரையான காலத்தில் நீங்கள் வசிக்கும் மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் திட்டமிடல் பிரிவின் உரிய அலுவலர்களை சந்தித்து அது தொடர்பான அறிவுறுத்தல்களை பெற முடியும்.

6. **இணைப்புகள்** :

6.1. பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதி;

6.2. க. பொ. த. (உ. தர) பரீட்சை பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழின் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதி;

6.3. க. பொ. த. (சா. தர) பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழின்/சான்றிதழ்களின் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதி;

**குறிப்பு**.- பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்றுச்சான்றிதழ் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படும்.

6.4. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதி;

6.5. வங்கிக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதியொன்று;

6.6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான பிரதேச செயலாளரின் ஒப்பமிடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவு தொடர்பான சான்றிதழ் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதி (கிராம அலுவலர் சான்றிதழ் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட கிட்டிய 03 வருடத்திற்கான வாக்காளர் பெயர் பதிவேட்டின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.);

6.7. நீங்கள் கையொப்பத்தை உறுதி செய்த அச்சிட்ட விண்ணப்பத்தையும் முறையாக பார் குறியீடு (BAR CODE) ஒட்டப்பட்ட மேற்குறித்த இணைப்பையும் கடித உறையினுள் இட்டு, அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் "தாதி, நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையின் பயிற்சிக்காக பயிலுநர்கள் இணைத்துக்கொள்ளல்-2018" மற்றும் நீங்கள் வசிக்கும் மாவட்டத்தையும் குறிப்பிட்டு 2018.09.21 ஆந் திகதிக்கு

முன்னர் தலைவர், மனிதவள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

**குறிப்பு**.- உரிய சான்றிதழ்களின் பிரதிகளை தம்மால் சான்றுறுதி செய்தல் வேண்டும். எல்லா பிரதிகளும் A 4 அளவில் இருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.-

7.1. இலங்கை நிருவாக சேவை அலுவலர்/ கல்வி சேவை அலுவலர்/ அரசாங்கத்தில் கணக்காளர் சேவை அலுவலர்/அரச பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த சம்பளம் 334,452 இற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.2. அரசாங்கம் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்கள தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதை கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

7.3. விண்ணப்பங்கள் தபாலில் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

7.4. குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7.5. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் மாதிரி விண்ணப்பத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

8. **நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள்**.-

8.1. நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய இணையத்தள விண்ணப்பம் மற்றும் பதிவுத்தபாலில் குறித்த தினத்திற்கு முன்னர் அனுப்பிய கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்திற்கு அமைய குறைந்த கல்வித்தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் Z பெறுமதிக்கு அமைய தயாரிக்கப்பட்ட முதன்மைப் பட்டியலொன்றை அடிப்படையாகக்கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், நேர்முக சபையினால் சேவை பிரமாணக்குறிப்பு மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஒவ்வொரு பதவிகளுக்குமாக குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளால் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமரப்பித்தல் வேண்டும்.

8.2. இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (உங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட).

8.3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

8.4. க.பொ.த (உ.த.) பரீட்சை பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட).

8.5. க.பொ.த (சா.த.) பரீட்சை பெறுபேற்றுச்சான்றிதழ் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட).

8.6. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

8.7. வங்கிக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டு.

8.8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான பிரதேச செயலாளரின் ஒப்பமிடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவு தொடர்பான சான்றிதழ் (கிராம அலுவலர்

சான்றிதழ் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் பெற்றுக் கொண்ட கிட்டிய 03 வருடத்திற்கான வாக்காளர் பெயர் பதிவேட்டின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்).

8.9. விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசி (இது தாதியர் மற்றும் பாடசாலை பற்சிகிச்சையாளர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் உரித்துடையதாகும்).

8.10. பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பயிற்சி நெறியொன்றில் பதிவு செய்யவில்லை அல்லது பங்கு பற்றவில்லை என்பதற்கான தங்களின் சான்றுறுதிக் கடிதம்.

**குறிப்பு**.- அ. அத்துடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ள (8.3) தொடக்கம் (8.7) வரையான ஆவணங்களின் மூலப்பிரதிகளுக்கு மேலதிகமாக தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்படப் பிரதிகள் நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது எடுத்துவருதல் வேண்டும்.

ஆ. பயிற்சிப் பாடசாலைகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியத்திற்கு ஏற்ப பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

இ. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

ஈ. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் http://www.health.gov.lk எனது இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

9. **பயிற்சித் திட்டம்**.-

9.1. நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் உரிய கற்கை நெறியை தொடர்வதற்கு அந்தந்த பயிற்சிப்பாடசாலைக்கு உள்வாங்கப்படுவர். கற்கை நெறிகள் இலக்கம் I அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளில் கற்றல் வேண்டும்.

9.2. பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படும் பயிலுனர்கள் பயிற்சிப்பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

9.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது தமது பயிற்சிப் பாடசாலையினது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளுக்கு அமையத் தவறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது பொய் அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்ட ஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

9.4. பயிற்சிக் காலத்தில் அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப ஆவணம் V இன் நியதிகளுக்கு அமைய மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

9.5. பயிற்சி பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்த பட்சம் பத்து வருடங்கள் (10) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ்/ மாகாண அரச சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறினால் பயிற்சிக்காலத்தின் போது அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட

செலவுகள் மற்றும் பிணைக்குரிய பணம் அவரினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

9.6. தாதி மற்றும் பாடசாலை பற் சிகிச்சையாளர் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் அனுப்பும் திகதிக்கு திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணமாகாதிருத்தல் கட்டாயமானதாகும்.

10. **சேவையில் ஈடுபடும் நியதிகள்**.-

10.1. பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு பொறுப்பேற்காது. ஆனாலும் பயிற்சிக்கு இணைக்கப்பட்ட கற்கை நெறிக்குரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் பயிற்சியை நிறைவு செய்யும் தினமாகும் போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிட பட்டியலுக்கு சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் எஞ்சும் வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு கட்டுப்படல் வேண்டும்.

10.2. பயிற்சியின் நிறைவில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டால் பொது நிர்வாக சுற்றிக்கை 03/2016 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

10.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கப்பட வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபனமாகினால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கருப்புப்பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படும். பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10.4. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு தகுதியற்றவராக கருதப்படும்.

10.5. மேற்படி இணைத்துக்கொள்ளப்பட்ட சகல உத்தியோகத்தர்களும் அரச சேவைக்குரிய சட்ட திட்டங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவையின் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கும், வழிகாட்டல்களுக்கும், கட்டளைகளுக்கும், சேவைப்பிரமாணக் குறிப்புகளுக்கும் அரச நிதிப்பிரமானத்திற்கும், அரசினால் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகள், அரசினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் திருத்தங்கள் என்பவற்றுக்கு கட்டுப்படல் வேண்டும்.

10.6. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ் அமைச்சு பொறுப்பு கூறாது. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் அறவிடப்படும்.

10.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான உரிமை இல்லை. அவ்வாறு பயிற்சியின் பின்னர் நீங்கள் உரிய பதவிக்கு நியமிக்கப்பட்டால் அதன் பின்னரும் அனுமதியளிக்கப்பட்டவர்கள் தவிர்த்து வேறு எவரும் தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான உரிமை இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரியவரின் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

10.8. பயிற்சிக்கு இணைத்தல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள் வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

பி. ஜீ. எஸ். குணதிலக்க,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10,
2018, ஓகத்து 15.

08-1141

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.